# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2269/76 - 2022 මාර්තු මස 04 වැනි සිකුරාදා - 2022.03.04

*2269/76 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, தங்கொட்டுவ (கட்டம் I) நீர் வழங்கல் திட்டத்தின், மெட்டிகொட்டுவ கன மீற்றர் 60,000 உடைய நீர் உள்வாங்கும் பிரதேசத்தை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டு ஒன்று தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிபத்துண்டின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல. : DVP/ 02/ 04/ PX/ 432.
நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35,
"லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2022, பெப்புருவரி 25.


1A – G 36275 – 32 (2022/03)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்தில், தங்கொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 472, மெட்டிகொட்டுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில், மெட்டிகொட்டுவ கிராமத்திலமைந்த, "சியம்பலாகஹவத்த" எனும் காணியில் முழு அளவில் சுமார் 92 பர்ச்சஸ் அளவிலான கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு.*

*காணியின் எல்லைகள் :*

வடக்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி ;
கிழக்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : மாஓய ;
மேற்கு : மாஓய வரையிலான உத்தேசிக்கப்பட்ட புதிய உட்பிரவேசிக்கும் வீதி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

01. டீ. பீ. ஆர். பெர்ணான்டோபுள்ளே,
இலக்கம் 412,
ஆர். ஏ. டி. மெல் மாவத்தை,
கொழும்பு 03.

EOG 03 - 0764

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, கங்க இஹல கோரலே நீர் வழங்கல் திட்டத்தின், பிடகந்த நீர் விநியோகத் தாங்கியிற்கான உட்பிரவேசிக்கும் பாதையை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டுகள் தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகளின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல.: DVP/ 02/ 01/ KY/ 440.
நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35,
"லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2022, பெப்புருவரி 25.

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், கங்க இஹல கோரலே பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 1054, பிடகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவில், ஹல்தொல, உடஹேனதென்ன கிராமத்திலமைந்த, "சமர்செட் வத்த" எனும் காணியில் கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 08 பர்ச்சஸ் அளவிலான காணித்துண்டுகள் இரண்டு.*

காணித்துண்டின் இலக்கம் : 01
காணியின் பெயர் : சமர்செட் வத்த
காணியின் அளவு : 02 பர்ச்சஸ்

*காணியின் எல்லைகள் :*

வடக்கு : எஸ். ஜீ. வீரக்கொடி உரிமை கோரும் காணி ;
கிழக்கு : எஸ். ஜீ. வீரக்கொடி உரிமை கோரும் காணி;
தெற்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி;
மேற்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி.

காணித்துண்டின் இலக்கம் : 02
காணியின் பெயர் : சமர்செட் வத்த
காணியின் அளவு : 06 பர்ச்சஸ்

*காணியின் எல்லைகள் :*

வடக்கு : அடிப் பாதை மற்றும் இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;
கிழக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி;
தெற்கு : வீடுகளுக்கு செல்லும் பாதை;
மேற்கு : அடிப் பாதை.

*காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் :*

*காணித்துண்டு இலக்கம் 01*

திரு. ஆர். ஏ. நிஹால் ரத்நாயக,
ஹல்தொல,
உடஹேன்தென்ன.

*காணித்துண்டு இலக்கம் 02*

தலைவர்,
காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு,
இலக்கம் 475,
கடுவெல வீதி,
கனேஹேன,
பத்தரமுல்லை.

மற்றும்

திரு. டப்ளியூ. ஜீ. தர்மசேன,
சமர்செட் குடியேற்றம்,
உடஹேன்தென்ன.

EOG 03 - 0765